**முதன்மை மாவட்ட  உரிமையியல் நீதிமன்றம்,**
**திருப்பூர்.**
**முன்னிலை : திரு.K.R கண்ணன், பி.ஏ.,பி.எல்.,**
**(J.O.CODE : TN01220)**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்**
**2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் நாள் திங்கட்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2055, சோபகிருது வருடம், பங்கனித் திங்கள் 05 ஆம் நாள்**

**<u>இடைக்கால மனு எண்.62/2024</u>**
**<u>அசல் வழக்கு எண்.229/2018</u>**

1. தங்கம்மாள்.

2. சசிகலா.

3. தனலட்சுமி. ..... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மனோகரி.

2. கிருஷ்ணகுமாரி.

3. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
   திருப்பூர்.

4. வட்டாட்சியர் அவர்கள்,
   திருப்பூர். ....
எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பாக 13.03.2024 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.சகாதேவன், M.Com., L.L.B., அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.நாகராஜன், B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலித்தும் இதுநாள்வரை இந்நீதிமன்றப் பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

இந்த மனு உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 151–ன்படி வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் 23.03.2022 ல் முடிக்கப்பட்ட சாட்சியத்தை மீண்டும் திறவு செய்திட உத்தரவிட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு உள்ளது.

2. **மனுவின் சுருக்கம்:–**

i) இந்த மனுவில் மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள். இந்த மனுவில் எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் பிரதிவாதி. மனுதாரர்கள் விளம்புகை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள்.

ii) மனுவில் 1ம் மனுதாரர் 3ம் மனுதாரருக்கு தாயார் ஆவார். 2ம் மனுதாரர் 3ம் மனுதாரருக்கு தங்கையாவார். வழக்கில் மனுதாரர்களது தரப்பில் 23.03.2022 ல் சாட்சியம் முடிக்கப்பட்டதை மீண்டும் சாட்சியம் அளிக்க உத்தரவு செய்திட மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

iii) வழக்கில் 3ம் மனுதாரரரின் தாயாரான 1ம் வாதி வாதிகள் தரப்பில் 1ம் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தில் 3ம் மனுதாரருக்கு திருமணம் முடிந்து 70 வருடங்கள் ஆகிவிட்டதாக தெரிவித்து நீதிமன்றத்தின் முன் சாட்சியம் அளித்துள்ளார். அதனை நிரூபணம் செய்திடவும், 3ம் மனுதாரர் பெற்றோரின் திருமண வாழ்வினை நிரூபணம் செய்திடவும், மனுதாரர் தரப்பில் கம்பத்திலிருந்து சாட்சியம் அளிக்க தற்போது வரதயாராக உள்ளனர்.

iv) 3ம் மனுதாரர் தாயார் 1ம் மனுதாரர் சாட்சியத்தில் திருமணம் ஆகி 70 வருடங்கள் ஆகிறது என்று தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மீண்டும் சாட்சியம் அளித்து அவரது தரப்பில் அதனை நிரூபணம் செய்திடவும், மனுதாரரது தாயாரின் சாட்சியத்தில் வயது குறித்து உரிய மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்திடவும், 23.03.2022ல் முடிக்கப்பட்ட மனுதாரர் தரப்பு சாட்சியத்தை மீண்டும் Re Open செய்திட வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :-</u>**

i) மனுதாரர்களின் மனு சட்டப்படியும், சங்கதிகள் படியும் நிலை நிறுக்கத்தக்கதல்ல. மனுவில் கூறியுள்ள சங்கதிகள் எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்கப்பட வேண்டும்.

ii) மனுதாரர் மனுவின் பிரமாணப்பத்திரிக்கையில் 3, 4ம் பத்திகளில் கூறியுள்ள சங்கதிகளில் 01.02.2021ம் தேதியன்று 1ம் வாதி 1ம் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளதையும், மேற்படி சாட்சியத்தில் அவருக்கு திருமணம் முடிந்து 70 வருடங்கள் ஆகிவிட்டது என்று சாட்சியம் அளித்துள்ளதை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். அவர் சாட்சியம் அளித்து சுமார் 3 ஆண்டுகள் ஆன நிலையில் தற்போது மீண்டும் அவரை சாட்சியம் அளிக்க அனுமதி கோரி தாக்கல் செய்துள்ள மனுவானது மேற்படி வழக்கினை

வேண்டுமென்றே காலம் தாழ்த்தும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டதாகும். எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

ii) பிரமாணப்பத்திரிக்கையில் 1ம் வாதியின் தரப்பில் திருமண வாழ்வினை நிரூபணம் செய்திட கம்பத்திலிருந்து வாதிகள் தரப்பில் சாட்சிகள் வரதயாராக உள்ளதாக கூறியுள்ளனர். ஆனால் அவர்கள் யார் என்றோ, அவர்களை பற்றிய தகவலோ எதுவும் குறிப்பிடவில்லை. மேலும், பிரமாணப்பத்திரிக்கையின் 5ம் பத்தியில் உரிய மருத்துவ ஆவணங்கள் என்று கூறியுள்ள ஆவணங்களும் என்ன ஆவணங்கள் என்றும் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டிய ஒன்றாகும்.

iii) வழக்கில் 1ம் வாதி கடந்த 01.02.2021ம் தேதியில் சாட்சியம் அளித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்தும், அதன் பிறகு எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து, சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைகளும் தாக்கல் செய்யப்பட்ட பிறகு தீர்ப்பிற்கு வரும் சூழ்நிலையில் வழக்கினை காலம் தாழ்த்தி திசை திருப்ப வேண்டுமென்று சுமார் 3 ஆண்டுகளுக்கு பிறகு இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்கள்.

iv) 1ம் வாதியின் வயது குறித்து ஆவணங்களும் சாட்சிகளும் ஏற்கனவே வாதிகள் தரப்பில் தாக்கல் செய்து அந்த ஆவணங்களை வாதிகளே அவர்களது தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்த பிறது, அனைத்து

ஆவணங்களும் அவர்களுக்கு எதிராக இருப்பதாலும், 1ம் வாதியின் சாட்சியமும் வாதிகளுக்கு எதிராக இருப்பதாலும், நீதிமன்றத்திற்கு வழக்கின் உண்மை தன்மை தெளிவாக தெரிந்துவிடும் என்று பயந்து வாதிகள் தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனு தள்ளுபடி தக்க ஒன்றாகும் என்று வாதுரைக்கப்பட்டுள்ளது.

4) இருதரப்பும் கேட்கப்பட்டது. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. கற்றறிந்த மனுதாரர் மற்றும் கற்றறிந்த எதிர்மனுதாரர்களின் தரப்பு வழக்கறிஞர்களின் வாதங்கள், வழக்கு கோப்பு பரிசீலனை செய்யப்பட்டது.

5) தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,

i) மனுதாரர்கள் கோரியவாறு மனு அனுமதிக்கப்பட வேண்டுமா?

6) **<u>தீர்வு</u>:–**

i) இந்த மனுவின் மனுதாரர்கள் தாவாவில் வாதிகள். இந்த மனுவின் எதிர்மனுதாரர்கள் தாவாவில் பிரதிவாதிகள். இந்த மனுவில் தரப்பினர்கள் தாவாவில் வாதுரைத்துள்ள படி விவாதிக்கப்பட்டு உள்ளார்கள்.

ii) தாவா வாதிகள் தாவாவில் இறந்து போன ராகவன் என்பவருக்கு வாதிகள் மற்றும் 2ம் பிரதிவாதி ஆகியோர் வாரிசுதாரர்கள் என்று விளம்புகை செய்யக்கோரி 2018 ஆம் வருடம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இரு தரப்பு சாட்சியம் முடிந்த பிறகு இரு தரப்பு வாதுரையை கேட்ட பிறகு இம்மனுவை

தாக்கல்செய்து வாதி தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறவு செய்து, மேலும் சாட்சியங்கள் விசாரிக்க கோரியும் இடைக்கால மனு எண். 63/2024 ன் மூலம் வா.சா.1 ஐ மீண்டும் விசாரணை செய்ய பரிகாரம் கோரப்பட்டுள்ளது.

iii) வாதிகள் தரப்பில் வா.சா.1 திருமணம் நடந்து 70 வருடங்கள் ஆகிவிட்டது என்று சாட்சியம்அளித்துள்ளதை மேலும் நிரூபணம் செய்ய வேண்டி வா.சா.1 ஐ விசாரணை செய்ய வேண்டியும், மேலும் பல சாட்சிகள் மூலம் அந்த கூற்றை நிரூபணம் செய்ய வேண்டியும், மருத்துவ ஆவணங்களை தாக்கல் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதுரைத்தார்.

iv) இந்த மனுவை கற்றறிந்த 1, 2 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கடுமையாக ஆட்சேபனை செய்து வா.சா.1 ற்கு திருமணம் முடிந்து 70 வருடங்கள் ஆகிவிட்டது என்பதை ஒப்புக்கொள்வதாகவும் அதற்காக மீண்டும் வா.சா.1 ஐ விசாரணை செய்ய வேண்டியதில்லை கூடுதல் சாட்சிகள் யார் எதற்காக அவர்களை விசாரணை செய்ய வேண்டும், என்ன மருத்துவ ஆவணங்கள் உள்ளது என்பதையெல்லாம் மனுவுடன் தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் வாதிகள் முறையாக வாதுரைக்கவில்லை. தாவாவில் தீர்ப்பு ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காகவும் தாவாவை காலம் தாழ்த்த வேண்டி

மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

v) இரு தரப்பு வாதங்களும் கருத்தில் கொள்ளப்பட்டது. 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் வாதுரைத்துள்ளபடி தாவாவில் இரு தரப்பு வாதுரைகளை கேட்ட பிறகு இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது சரிதான். அதேபோல் வா.சா.1 ஐ எதற்காக மீண்டும் விசாரணை செய்ய வேண்டும், மேலும் விசாரணை செய்யப்போகின்ற சாட்சிகள் யார், என்ன மருத்துவ ஆவணங்கள் வாதிகள் தாக்கல் செய்ய உள்ளார்கள் என்பதையெல்லாம் முறையாக நிரூபண வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்பதும் சரிதான்.

vi) மேலே விவாதித்ததின் அடிப்படையில் நீதியின் நலன் கருதி வாதிகள் தரப்பில் தாவாவில் கோரியுள்ள பரிகாரங்களை வாதிகள் நிரூபணம் செய்ய ஒரு வாய்ப்பு வழங்குவதே சட்டத்தின்பால் சிறந்தது என்று முடிவு செய்து நீதியின் நலன் கருதி இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதிகள் 1, 2 பிரதிவாதிகளுக்கு 27.03.2024 ஆம் தேதிக்குள் ரூ.1,000/- (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) செலவுத் தொகையாக செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டும், தாவா திறவு செய்யப்பட்டு 27.03.2024ம் தேதி வா.சா.1 விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. அழைக்க 27.03.2024.

I.A.No.62/2024 18.03.2024

7) முடிவில், இம்மனு நிபந்தனையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதிகள் 1, 2 பிரதிவாதிகளுக்கு 27.03.2024 ஆம் தேதிக்குள் ரூ.1,000/– (ரூபாய் ஒரு ஆயிரம் மட்டும்) செலவுத் தொகையாக செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டும், அன்றைய தினமே வா.சா.1 விசாரணை செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. அழைக்க 27.03.2024.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2024–ம் ஆண்டு மார்ச் மாதம் 18–ம் நாள் திங்கட்கிழமை அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2024.03.18 18:22:16 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.

<u>இரு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :–</u> இல்லை.

K R KANNAN
Digitally signed by K R KANNAN
Date: 2024.03.18 18:22:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்.